2013 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்புக்கு என் சார்பிலும், திருவாரூர் மாவட்ட மக்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 392, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

392—

புதிய வட்டம்

***6455—திரு. பா. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து வாலாஜாபாத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

உத்தேசிக்கப்படுகிற காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம் அரசாணை எண் 279, வருவாய்த் துறையால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களைப் பூர்த்தி செய்வதால், வாலாஜாபாத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்த முழுமையான செயற்குறிப்புகள் பெறப்பட்டவுடன் மேற்சொன்ன வட்டம் பிரிப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மே 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள்.*

திரு. பா. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை எல்லாம் ஆளாக்கி, வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற, நாங்கள் எல்லாம் நித்தம், நித்தம் வணங்கும் எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம், கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் பொற்கால முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று தமிழகத்தில் சரித்திர சாதனைகளைப் படைத்து, நாளை இந்தியத் திருநாட்டை அலங்கரிக்க இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

எளிய தொண்டனான எனக்கு காஞ்சிபுரம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றும் நல் வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். காஞ்சிபுரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, வாலாஜாபாத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தொகுதி மக்களின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், உத்திரமேரூர் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கவும், ஒரக்காட்டுப்பேட்டை பாலாற்றில் மேம்பாலம் அமைக்கவும், உத்திரமேரூர் மற்றும் வாலாஜாபாத் புறவழிச் சாலை அமைத்திடவும், இளையனார்வேலூரில் துணை மின் நிலையம் அமைத்திடவும் ஆணை வழங்கிய, முத்தான திட்டங்களை வாரி வழங்கிய நான் என்றும் வணங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியினை பொற்பாதக் கமலங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலாஜாபாத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் எப்போது தொடங்கப்படும் என்று பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி*

2013 மே 3]

அம்மா அவர்களுடைய அரசினால் கொண்டு வரப்படுகிற எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள் விரைவிலே மக்களைச் சென்றடையவேண்டும் என்கிற அடிப்படையிலே தேவைப்படுகின்ற இடங்களில் எல்லாம் புதிய வட்டங்களைத் தோற்றுவிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப் பிறப்பித்திருக்கிறார்கள்.

பொதுவாகவே ஒரு வட்டம் பிரிக்கப்படுகிறபொழுது, அந்த பிரிக்கப்படுகிற வட்டத்தினுடைய பகுதியானது குறைந்தபட்சம் ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்டதாகவும், அதேபோல் பிரிக்கப்படுகிற அந்தப் பகுதியானது 250 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுகளைக் கொண்டதாகவும், பிரிக்கப்படுகிற பகுதியானது குறைந்தபட்சம் 30 வருவாய்க் கிராமங்களைக் கொண்ட பகுதியாகவும் அமைகின்றபட்சத்திலே, புதிய வட்டம் பிரிப்பதற்கு உண்டான நடவடிக்கையை எடுப்பதற்காக ஓர் உயர் மட்டக் குழுவை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அமைத்திருக்கிறார்கள். மேற்சொன்ன அந்த வாலாஜாபாத் பகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு புதிய வட்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்று இங்கே கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 11 வட்டங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கின்றன. அந்த புதிய வட்டமானது 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்டதாக இருக்கின்றது. ஒரு இலட்சம் மக்கள் தொகை இருந்தாலே அந்த வட்டத்தைப் பிரிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அதனடிப்படையிலே 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையில் இருக்கின்ற காரணத்தினாலே இந்தப் பகுதியை முன்னுரிமை அடிப்படையிலே, வருவாய்த் துறை ஆணையாளருடைய அறிக்கையைப் பெற்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று இந்தப் புதிய வட்டம் அமைப்பதற்கான பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

இந்த நேரத்திலே நான் ஒரு கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு 'அம்மா திட்டம்' என்ற அற்புதமான திட்டத்தை தமிழகத்திலே செயல்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களைத் தேடி அதிகாரிகள் செல்லக்கூடிய ஓர் அற்புதமான திட்டம் 'அம்மா திட்டம்'. இந்தப் புதிய வட்டம் செயல்பாட்டுக்கு வருகின்றவரை, 'அம்மா திட்டத்தை' மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 'அம்மா திட்டம்' ஆரம்பிக்கப்பட்ட இந்த மூன்று மாத காலத்திற்குள், 3,19,204 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே, எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சாதனை என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அம்மா திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 393, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

393—

சிற்பக்கலைக் கல்லூரி

*__6791__—**திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், திருமுருகன்பூண்டி பகுதியில் சிற்பக்கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆசிரியர்கள்தான் மாணவர்களை படி, படி என்று சொல்லிக்கொண்டு இருப்பார்கள். ஆனால், அந்த ஆசிரியர்களுக்கே படி, அதாவது 8 சதவிகித அகவிலைப்படியை வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு